**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**நாள். 11.09.2025.**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**அசல் வழக்கு எண். 68/2024**

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் நாள் வியாழக்கிழமை நீதிமன்ற சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கன்னியப்பன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | பெருமாள் | வயது | : | 65 |
| ஊர் | : | சிறுவேலியநல்லூர் | தொழில் | : | விவசாயம் |

**வா.சா. 1 (கன்னியப்பன்) வாதி தரப்பு முதல் சாட்சியின் முதன்மை விசாரணை:**

நான் இவ்வழக்கில் **வாதி தரப்பு முதல் சாட்சி (வ.சா.1) ஆவேன்.** எனது வாக்கு மூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். எனக்கு எழுத படிக்க ஓரளவுக்குதான் தெரியும். கையொப்பமும் இடுவேன். எனது வழக்கறிஞர் படித்துக் காண்பிக்க அதை நான் புரிந்துகொண்டு கையொப்பம் இட்டேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். இதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும்.

**கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

1. 14.07.2021 தேதியிட்ட வாதியின் தாயார் கன்னியம்மாள் வாதிக்கு தாவா ஏ செட்யூல் சொத்தை எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் அசல் **வா.சா. ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

2. 10.06.2024 தேதியிட்ட இணையம் மூலம் பெறப்பட்ட தாவா ஏ செட்யூல் சொத்திற்கான பட்டா எண்.1174ன் கணினி நகல் **வா.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

3. 16.06.2024 தேதியிட்ட இணையம் மூலம் பெறப்பட்ட1 முதல் 5 அயிட்ட தாவா பி செட்யூல் சொத்திற்கான பட்டா 673 **வா.சா.ஆ.3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

**(கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதன்மை விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பாரத்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2025.09.11 15:21:42 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு